# FAMOUS MORAL STORIES

Indian Vedic School
Language of the Gods

BY INDIAN VEDIC SCHOOL

TAMIL VOL - 3


















Indian Vedic School
Language of the Gods

# FAMOUS MORAL STORIES

BY INDIAN VEDIC SCHOOL

TAMIL VOL - 3


















# INDEX


| | |
|---|---|
| RICHMAN'S POEM | 1-7 |
| SELFISHNESS | 8-15 |
| SHOE THIEF | 16-23 |
| SHORT CUT | 24-31 |
| SNORING | 32-40 |
| ABRACA DABRA | 41-48 |

# பணக்காரனின் கவிதை




ஒரு நாள், கீவாநாத் என்கிற பிரபல கவிஞர், ராம்பூர் வந்து ,தான் எழுதிய கவிதையை உரைக்கிறார்.
ஆஹா...
ரொம்ப நன்றாக இருக்கிறது.
உண்மை. நாம் இவ்வளவு பணக்காரராக இருந்தும், அதனால் ஒன்றுக்கும் பயனில்லை. யார் அவர் வாழ்வில் கவிதைகள் எழுதுகிறார்களோ, அவர்கள் வாழ்க்கை நிறைவடைகிறது.
இவ்விழாவில் கீவாநாத்தின் கவிதையை கேட்டு ஆச்சரியமும் ஆனந்தமும் கொண்டார் ஒரு பணக் காரர்அவர் அருகிலிருக்கும் ஒரு கிராமத்திலிருந்து வந்திருந்தார்.
கீவாநாத் ஒரு மிக பெரிய கவிஞர். அவரால் நான் மிகவும் தூண்டுதல் பெற்றுள்ளேன் நானும் கவிதை எழுதத்தொடங்குவேன்.


அவர் கவிதை எழுத தொடங்கினார்.
ஆஹா...அற்புதம்.
நான் உனக்கு தக்க சன்மானம் பிறகு தருகிறேன்.
என் கவிதையை கேள்.


நிறுத்து ! உன் கவிதை அபத்தமாக உள்ளது.
ஆனால், இப்போதுதான், நந்து அதை நன்றாக உள்ளது என்று பாராட்டினான்.
நந்து கண்டிப்பாக உன் கவிதையை பாராட்டுவான் ஏனெனில் நீ அவனுக்கு மளிகைப்பொருட்களை கடனுக்குத்தருகிறாய்.
அதாவது, நான் உங்களுக்கும் மளிகைப்பொருட்களை கடனுக்குக்கொடுத்தால், நீங்களும் என் கவிதையை பாராட்டுவீர்கள் அல்லவா?
தேவையானவற்றை வாங்கிக்கொண்டு கவிதையை பாராட்டுகிறார்.
அதேபோல் ஊர்மக்கள் எல்லோரும், வீட்டிற்குத் தேவையான மளிகைப்பொருட்களை வாங்கிகொண்டு, பொய்யாக பாராட்டிவிட்டுச் சென்றனர்..


பணத்தை உடனே தருமாறு கேட்டு வற்புறுத்தினால் நான் எல்லோரிடமும் உன் கவிதை அபத்தமாக இருக்கிறது என்ற உண்மையைக் கூறிவிடுவேன்.
என்ன ?
எங்கே சென்றாலும் எல்லோரும் இதையே கூறினார்கள். அவர் தன் கடனை திருப்பித் தருமாறு வாடிக்கையாளர்களை கேட்கும் போது அனைவரும் அதையே கூறி மிரட்டத்தொடங்கினர்.
தன் பழைய வாடிக்கையாளர்களிடம் கடனை திருப்பி வசூலித்தவர். புதியவர்களுக்கு கடனுக்கு பொருட்களை கொடுத்ததுடன், அவர்கள் தன் கவிதையை கேட்குமாறும் வற்புறுத்தினார். அவர்களுக்கும் வேறு வழியின்றி கேட்டுப் பாராட்டினர்.
ஒரு நாள், பக்கத்து ஊருக்குச்சென்றார். அங்கு ஆயிரக்கணக்கானவர்கள் மத்தியில் ஒரு இளைஞன் கவிதை சொல்லிக்கொண்டிருந்தான்.



எல்லோரும் அவனை பாராட்டிக்கொண்டிருந்தனர்.
ஐயா, தாங்கள் எந்த ஊர் ?
ஏன் இந்த கேள்வியை கேட்கிறீர்கள்?
வேறொரு ஊரிலிருந்து வந்திருக்கும் கவிஞர்களை மட்டுமே பாராட்டுவார்கள் ?
என்ன சொல்கிறீர்கள்?
அவனுக்கு நடக்கும் விஷயங்களை கூறுகிறான்.
நான் என் பணத்தையெல்லாம் இழந்து கொண்டிருக்கிறேன்.


உன்னுடைய பலவீனத்தை மக்கள் பயன்படுத்திக் கொண்டார்கள். உண்மையாகவே உன் கவிதை நன்றாக இருந்தால், எப்படி அவர்களால் உன்னை மிரட்ட முடியும்.
என் அறிவுரையை கேள். உனக்கு கவிதையில் ஆர்வம் உள்ளது என்றால், உன் தொழிலை நிறுத்திவிட்டு, கவிதை எழுதுவதில் கவனம் செலுத்து. உன் கடின உழைப்புக்கு பின், நீ பிரபலம் அடைவாய்.
அல்லது, கவிதை எழுதுவதை நிறுத்திவிட்டு உன் தொழிலில் கவனம் செழித்து.
அவன் கவிதை எழுதுவதை நிறுத்திவிட்டு தொழிலில் கவனம் செழித்தினான்.
முடிவு.


சுய நலம்


ஒரு காலத்தில் மாஸெடோனியாவில் ஒரு சிறு ஊரில் மாக்னெஸ் என்ற கிழவன், அட்டிகஸ், அகஸ்டஸ் என்ற பெயர் கொண்ட தன் இரு மகன் களுடன் வாழ்ந்து வந்தான்.
மாக்னெஸ் மரணப்படுக்கையில் இருந்தான். ஒரு நாள் அவன் தன் இரு மகன்களையும் தன்னிடம் அழைத்தான்.
மகன்களே, என் முடிவு நெருங்கிக்கொண்டிருக்கிறது. நான் சொத்து பிரச்சனையை முடிக்க விரும்புகிறேன்.
அப்படி சொல்லாதீர்கள் அப்பா ....
அட்டிகஸ், நான் நல்ல வாழ்க் கையை வாழ்ந்து விட்டேன். என் முடிவுக்கு நான் அஞ்சவில்லை.


அகஸ்டஸ், உங்கள் இருவரில் பெரியவன் உன் அண்ணன் தான், ஆகவே வர்த்தகத்தை அவனிடம் ஒப்படைக்க நான் விரும்புகிறேன், நீ என்ன சொல்கிறாய், மகனே.
மாக்னெஸ் தன் சின்ன மகன் அகஸ்டஸ் உடைய சுபாவத்தை அறிவான், அவன் தன் அண்ணன் போல் அல்லாமல், ஒரு சுய நல வாதியாகவும், தன்னையே மையமாகவும் கொண்டிருந்தான்.
அப்பா, நான் ஒன்றும் நினைக்கவில்லை, ஆனால் அண்ணனை விட நான் வர்த்தகத்தை நன்றா க கவனி ப்பேன், ஏனெனில், நான் அவனை விட அதிகம் படித்து அனுபவம் உள்ளவன். ஆனால் நீங்கள் நினைத்தது போலவே செய்யுங்கள்.
அட்டிகஸ் நேர்மையானவனும் சாதாரணமானவனும் ஆவான்.
அப்பா, அகஸ்டஸ் சொல்வது சரிதான். அவனுக்கு எப்பொழுதும் வர்த்தகத்தில் ஆர்வம் உண்டு. நீங்கள் வர்த்தகத்தை அவன் கையில் கொடுத்தால், நான் உண்மையில் கவலைப்படமாடேன்.


சரி மகனே, வர்த்தகத்தை அவன் கவனிக்கட்டும், நீ கடையையும், கால்நடைகளையும் கவனி.
அகஸ்டஸ் மிகவும் சந்தோஷம் அடைந்தான்.
மறு நாள் மாக்னெஸ் தன் வக்கீலையும் ஊரிலுள்ள சில பெரியவர்களையும் அழைத்து, ஓர் உயில் எழுதினான்.
இதோ அகஸ்டஸ், அட்டிகஸ், உங்கள் சொத்துகளை கவனித்துக்கொள்ளுங்கள்...



சில நாட்களுக்குப்பிறகு மாக்னெஸ் இறந்து விட்டான்.
அட்டிகஸ், அகஸ்டஸ் இருவரும்
தத்தம் வேலைகளை கவனித்து வந்தனர்.
ஒரு நாள் அகஸ்டஸ் அலுவலகத்திற்கு அவனை பார்க்க சிலர் வந்தனர்.
ஆமாம், நான் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும் ?


அகஸ்டஸ், அப்பாவுடைய மரணத்திற்கு வருந்துகிறோம்.
ஆனால், அவர் 5000 சவரன் கடன் பட்டு உள்ளார்.
இதைக்கேட்டு அகஸ்டஸ் அதிர்ச்சி அடைந்தான். உடனே மேலாளரை அழைத்தான்.
மேலாளரே, இவர்கள் என்ன சொல்கிறார்கள்?
திடீர் என அவர் ....
அவர்கள் சொல்வதெல்லாம் உண்மை தான். ஐயா 8000 தங்க காசுகள் வர்த்தக விருத்திக்காக பஜாரிலிருந்து கடன் வாங்கினார், ஆனால், திடீர் என இறந்து விட்டார்.
திருப்பி கொடுக்க சிறிது அவகாசம் கொடுங்கள்



அவர்கள் சென்ற பின்....
அப்பா, என் சுய நலத்திற்கு மன்னிக்கவும்
அட்டிகஸ் இதை அறிந்தவுடன் தன் தம்பியை நோக்கி ஓடினான்
கவலைப்படாதே தம்பி, கடனை உன்னால் திருப்பி கொடுக்க இயலும், எனக்கு உன் மீது நம்பிக்கை உண்டு. இந்த நெருக்கடியிலிருந்து நாம் மீண்டு விடுவோம்.
திருப்பி கொடுப்பதா, நானா ..
அகஸ்டஸ், தன் அண்ணனுக்கு தன் மீதுள்ள நம்பிக்கையை அறிந்து தன்னை மேலும் குற்றவாளியாக உணர்ந்தான்.
இந்த நிகழ்ச்சி , அகஸ்டஸ் கண்களை திறந்து விட்டது. அவன் நேர்மையாக உழைக்க ஆரம்பித்து விட்டான்.


அகஸ்டஸ் எல்லா கடனையும் தீர்த்தான்.
தயவு செய்து உனக்கு உரியதை எடுத்துக்கொள்.
அட்டிகஸ் வர்த்தகத்தில் பலவீனமாக இருந்ததால், அகஸ்டஸ் அவனுக்கு உதவி செய்ய ஆரம்பித்தான்.
இருவரும் ஒருத்தருக்கொருவர் துணை புரிந்து , மகிழ்ச்சியாக ஒன்றாக வாழ்ந்தனர்.
முடிவு.

# காலணி திருடன்




ஒரு நாள் ராகேஷ் கோவிலை விட்டு வெளியே வரும் பொழுது தன் காலணிகள் காணாமல் போனதை கவனித்தான்.
வேறு யாரோ என் காலணிகளை தவறுதலாக அணிந்து சென்றுள்ளனர். சிறிது நேரம் பொறுத்திருந்து பார்ப்போம், ஒரு வேளை அவர் திரும்பி வருவார்.
சென்ற வாரம் தான் அதை வாங்கினேன். புது மாதிரியானவை. திருப்பி கிடைக்கும் என நம்புகிறேன்.
ராகேஷ் கவனித்தான்
இந்த செருப்புகள் மஹேந்திரநாத் உடையவை. அணிந்து நடக்கும் போது சத்தம் வருவதால், அதை யாரும் அணிவதில்லை.


மஹேந்திரநாத் தான் தன்னுடைய காலணி களை அணிந்து சென்றிருப்பான் என நினைத்து, ராகேஷ் அவன் வீட்டுக்கு சென்றான்.
மஹேந்திரநாத் வாசப்படியில் அவன் காலணிகள் இருப்பதை கண்டான்.
இதோ, இங்கே இருக்கு ...
ராகேஷ் மஹேந்திரநாத் உடைய செருப்புகளை கழற்றி விட்டு, தன் காலணிகளை அணிய முயலும் பொழுது ...
ஓய், நீ என்ன செய்கிறாய், அவை என்னுடைய காலணிகள், அங்கேயே விடு.
நீ அப்படி சொன்னால் சரி. அனால், ஏன் உன்னுடைய செருப்புகள் கோவிலில் இருந்தன


ஹ்ம்ம்ம்.... தேவைப்பட்டோருக்காக நான் தான் விட்டேன்.
அவனுடன் வாதாடி பிரயோஜனம் இல்லை, இவன் பொய் சொல்கிறான், அது எனக்கு நல்லாவே தெரியும்,
கிராமம் முழுக்க மஹேந்திரநாத் உடைய செருப்பும் அது உண்டாக்கும் சத்தத்தையும் பற்றி அறியும்.
அன்றிரவு ராகேஷ் உடைய தோழன் விஷ்வநாத் அவனைப்பார்க்க வந்தான். ராகேஷ் முழு கதையும் சொன்னான்.


அவனுக்கு பாடம் கற்பிக்க இது தான் சரியான நேரம். கிராமத்தில் அனைவருக்கும் அவனைப்பற்றி தெரியும்.
இருவரும் ஒரு திட்டம் தீட்டினர்.
அடுத்த நாள் ராகேஷ் தன் வீட்டிற்கு முன் அமர்ந்து ....
மஹேந்திரநாத் என் காலணிகளை திருடிக்கொண்டான் ....
தொடர்ந்து ராகேஷ் உரக்க கத்தலானான்.
மஹேந்திரநாத் என் காலணிகளை திருடிக்கொண்டான் ...


கிராமத்தினர் இதைக்கேட்டு யோசித்தனர். மஹேந்திரநாத் ராகேஷ் உடைய காலணிகளை
திருடாமல், இவன் இப்படி கத்திக்கொண்டிருக்க மாட்டான்.
மஹேந்திரநாத்திற்கு இது தெரிய வந்தது.
மஹேந்திரநாத் கிராமத்தில் நடந்து செல்லும் பொழுது
மக்கள் அவன் காலணிக்ளை கவனித்தனர்.
சில பேர் இந்த புதிய காலணி
களைப்பற்றி விசாரிக்கவும் செய்தனர்.


மஹேந்திரநாத் வெட்கித்தான். ராகேஷ் நினைத்திருந்தால் தன்னுடன் சண்டையிட்டு அவமானப்படுத்தியிருக்கலாம். ஆனால் ராகேஷ் அப்படி செய்யவில்லை.
அவன் செய்த செயல் அவனைக் குற்றவாளி ஆக்கியது.
மஹேந்திரநாத்தால் குற்ற உணர்ச்சியுடன் இருக்க முடியவில்லை.
மூன்றாவது நாள் ராகேஷ் வீட்டில் இல்லாத சமயம் பார்த்து, மஹேந்திரநாத் மெதுவாக அவன் வீட்டுப்பக்கம் வந்து, காலணிகளை படிக்கட்டில் விட்டு விட்டான்.


ராகேஷ் திரும்பி வந்து தன் புதிய காலணிகளை கண்டான்.
ஓவ் ... என் புது காலணிகள் ... கடைசியில் ....
மஹேந்திரநாத் ஊருக்கு சென்று அதே மாதிரியான ஒரு ஜோடி காலணிகளை வாங்கி வந்தான்.
Shoe's
அனைவருக்கும் காட்டுவதற்கு அங்கும் இங்கும் கிராமத்தில் நடக்கலானான்.
ராகேஷ் & விஷ்வநாத் இதை கவனித்து பலமாக சிரித்தனர்.
முடிவு.

# குறுக்கு வழி





மகத ராஜ்ஜியத்தின் இளவரசன் ஒவ்வொரு வருடமும் அறுவடைப் பண்டிகை நாளில் நடக்கும் மாட்டு வண்டி ஒட்டப்பந்தயத்தில் ஜெயிக்கும் வீரனை கௌரவித்து பரிசளிப்பதுண்டு.
பண்டிகைக்கு சிறிது முன் ....
கடந்த 5 முதல் 6 வருடங்களாக குருதத்தும் சத்யாவும் முதலாவது பரிசும் இரண்டாவது பரிசும் பெற்றுக்கொண்டிருந்தனர்.
இவ்வருடம் யார் இந்த கௌரவத்தை பெறப்போகிறார் என பார்ப்போம்.
மாட்டு வண்டி ஒட்டப்பந்தயம் மகதத்தை சுற்றியுள்ள ஊர்களில் மிகப்புகழ் பெற்றது. பந்தயம் கட்டுவது மிக பொதுவான விஷயமாக அப்பொழுது இருந்தது. மக்கள் நிறைய பந்தயம் கட்டினர்.
குருதத், சத்யாவை தவிர மேலும் 20 பேர் போட்டியிட்டனர்.
ஒவ்வொருவரும் தம் மாட்டை நிறைய தீனி யிட்டு நன்றாக வளர்த்து வந்தனர்.



மகதா ராஜ்ஜியத்தில் சூர்பி, காபூஎன்று இரண்டு இளைஞர்கள் இருந்தனர்.
ஓய் சூர்பி, இந்த தடவை பந்தயம் கட் டுகிறாயா ?
ஒஹ், ஆமாம், பணம் சம்பாதிக்க அது தான் சுலபமான வழி.
வழக்கம்போல காபூ சத்யா வின் மாட்டுகளின் மீது பந்தயம் கட்டினான்.
அதே கிராமத்தில் கோவிந்த் என்ற புத்திசாலியானவனும் கணக்கிடுபவனுமான பணக்கார விவசாயி ஒருத்தன் இருந்தான்.
ஒரு நாள் சூர்பியும் காபூவும் கோவிந்த் வீட்டிற்கு வந்தனர்.
பையன்களே, நான் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும்?
ஐயா, காபூவும் நானும் எங்களுடைய பங்குகளை குருதத், சத்யா மாடுகள் மீது கட்டி விட்டோம். நீங்கள் எங்களுக்குள் மத்தியஸ்தராக இருக்கவேண்டும்.


நீங்கள் இருவரும் சரியான இடத்திற்குத்தான் வந்திருக்கிறீர்கள். இதை சாதகமாக்கி கொஞ்சம் பணம் பண்ண இது நல்ல நேரம்.
இந்த 2000 ரூபாயை எங்கள் இருவர் சார்பாக வைத்துக்கொள்ளவும் இந்த முழுத்தொகையையும் பந்தயத்தை ஜெயிப்பவருக்கு கொடுத்து விடுங்கள்.
அதாவது , குருதத்துடைய மாடுகள் ஜெயித்தால், இந்தப்பணம் சூர்பிக்கும், சத்யாவுடைய மாடுகள் ஜெயித்தால், இது காபூவுக்கும் போகும் நான் தப்பாக சொல்லியிருந்தால் என்னை திருத்துங்கள்.
அது சரி தான் ஐயா.
இருவரும் அங்கிருந்து திரும்பி விட்டனர்.
அன்று மாலை கோவிந்த் ஒரு குறிப்பு எழுதினான் ...
குருதத்துடைய மாடுகள் ஜெயித்தால் 2000 ரூபாய் சூர்பிக்கு போகும், சத்யாவுடைய மாடுகள் ஜெயித்தால், இந்த பணம் காபூவுக்கு போகும். அவன் அந்த குறிப்பை, சூர்பிக்கும், காபூவுக்கும் அனுப்பி வைத்தான்.


பந்தயத்திற்கு ஒரு நாள் முன் கோவிந்த் சூர்பியை தன் வீட்டிற்கு அழைத்தான்.
இந்த தடவை சத்யாவுடைய மாடுகள் ஜெயிக்கும் என்று என் அனுபவம் சொல்கிறது. நீ கேட்டால் நான் ஒரு அறிவுரை சொல்கிறேன்.
ஆமாம் ... சொல்லுங்கள்.
இந்த பொடியை சத்யாவுடைய மாட்டுத்தீனியில் கலந்து விடு. குருதத் மாடுகள் மீது உன் பந்தயம் பாதுகாப்பாக இருக்கும்.
சூர்பி பொடியை கொண்டு சென்றுவிடுகிறான்.
பிறகு கோவிந்த் காபூவை அழைத்து அதே யோசனையை சொல்கிறான். காபூவும் பொடியை கொண்டு செல்கின்றான்.
பந்தய நாளன்று அனைத்து போட்டியினரும் ஓட்டத்திற்கு தயாராக உள்ளனர்.
எல்லோரும் தயாராக இருங்கள் .....
நான் நிச்சயமாக ஜெயிப்பேன்
நான் ஜெயிப்பேன்.


ஜாக்கிரதை
ஒட்டப்பந்தயம் ஆரம்பித்து விட்டது.
ஆச்சரியமாக குருதத், சத்யாவுடைய மாடுகள் மற்றவர்களை விட மிகவும் பின்னடைந்து இருந்தன.
ஓடி வா ...
ஹர்ர்ர்ர்ர் .... ஹர்ர்ர்ர்ர்
இது எப்படி, குருதத், சத்யாவின் மாடுகள் பின்னடைந்து விட்டன ?
இது ஒரு சாதனை.
குருதத், சத்யா இருவரும் தோற்றுவிட்டனர்.


இளவரசன் வென்றவனை கௌரவித்தான்.
யார் உன் முதலாளி?
என் முதலாளி கோவிந்த் இளவரசரே
சூர்பி, காபூ இருவருமே ஆச்சரியம் அடைந்தார்கள்.கோவிந்தை சந்திக்க முயன்றார்கள். ஆனால் அது அடுத்த நாள்தான் முடிந்தது.
ஐயா, நீங்கள் எங்களை ஏமாற்றிவிட்டீர்கள், எங்கள் பணத்தை திருப்பி தாருங்கள்.
எந்த பணம் ?
பந்தயம் கட்டிய பணம் தான்.


நான் அனுப்பிய குறிப்பை நீங்கள் இருவரும் படிக்கவில்லை ?
ஆமாம், படித்தோம்.
இல்லை, நீங்கள் படிக்கவில்லை. குருதத் அல்லது சத்யா வென்றால் உங்களுக்கு பந்தய பணம் கொடுக்கப்படும் என எழுதியிருக்கிறது.
அதாவது, வேறு யாராவது ஜெயித்தால் உங்கள் இருவரில் யாருக்கும் பணம் கிடைக்காது.
ஒரு அதிர்ச்சியுடன் சூர்பியும் காபூவும் திரும்பினர்.
அவன் நம்மை கழுதை ஆக்கிவிட்டான்
ஆமாம், நீ சொல்வது சரி தான். அவன் தந்திரமான மத்தியஸ்தன் தான்.
முடிவு.


குறட்டை
GHARRRRRRRR....


ரஜேஷ்வரி, ஷிவ்பூர் கிராமத்தில் மோஹன் என்ற வாலிபனை மணந்தாள்.
அடுத்த நாள் அதி காலையில் திருமணம் இருந்ததால் அனைவரும் அன்றிரவு நேரத்தோடு படுக்கச்சென்றனர்.
பெரிய சத்தத்தை கேட்டு அனைவரும் திடுக்கிட்டு எழுந்தனர்.
என்ன ?
கவலைப்படாதீர்கள், இது காமாக்ஷியின் குறட்டை.


ஆமாம். அசௌகரியத்திற்கு நாங்கள் வருந்துகிறோம். நம் உற்றார் காமாக்ஷி சத்தத்துடன் குறட்டை விடுவார்.
எப்படியோ குறட்டை சத்தத்தை அன்றிரவு அனைவரும் பொறுத்துக்கொண்டனர், மறு நாள் திருமணமும் முடிந்தது. மாப்பிள்ளை வீட்டார் சென்றுவிட்டனர்.
கிராமத்து மக்கள் காமாக்ஷியின் குறட்டை களால் அலுத்துப்போயி ருந்தனர்.
ஆண்டவனே, அவள் குறட்டைகளை என்னால் பொறுக்க முடியவில்லை. இந்த அறையில் என்னால் தூங்க முடியவில்லை.


காமாக்ஷியில் கணவன் வீட்டிற்கு வெளியே
தூங்க முயற்சித்தார், ஆனால்,
அங்கும், அவருக்கு நிம்மதி கிட்டவில்லை.


காமாக்ஷியின் கணவர் தன்
மனைவியிடம் அலுத்துப்போய்
அவளை விட்டு போய் விட்டார்.


அரண்மனையில் ராஜாவும்
ராணியும் பேசிக்கொண்டனர்.
அன்பே, அது
என்ன சத்தம், நான்
கேட்கிறேன்.


என் மன்னா, சுவர்ண முகி ஆறு வெள்ளம் பெருகி போய் கொண்டிருக்கிறது என நான் நினைக்கின்றேன்.
சிப்பாய்களே, அது என்ன சத்தம் ?
மகாராஜா, இது காமாக்ஷி என்ற பெண்மணியின் குறட்டை சத்தம். அனைவரும் அதனால் அலுத்துப்போயுள்ளனர். இதே காரணத்தினால் அவளை கணவனும் விட்டு போய் விட்டான்.
ஓஹ், அவளை இங்கே அழைத்து வாருங்கள்.


காமாக்ஷி, உன் குறட்டைகள் எங்களை அரண்மனையிலேயே பயமுறுத்தி விட்டன. மற்ற மக்களின் கதி எப்படி இருக்கும்.
என் மன்னா, நான் என்ன செய்ய முடியும். அனைவரும் அலுத்து போய் உள்ளதை நான் அறிவேன், ஆனால் ...
காமாக்ஷி நீ மற்றவரை தொந்தரவு செய்யக்கூடாது. மக்களால் இரவில் தூங்க இயலவில்லை. உன் குறட்டை களுக்கு நீ ஏதாவது செய்தாக வேண்டும்.
காமாக்ஷி, நீ சில காலம் காட்டிற்குப்போய் அங்கே குடியிரு.


காமாக்ஷி காட்டிற்குப்போகிறாள்.
GHARRRRRRR...
காட்டுப் பிராணிகள் குறட்டை சத்தத்திற்கு பயந்து அங்கும் இங்கும் ஓட ஆரம்பித்து விட்டன. கிராமத்திற்குள் நுழைந்து மக்களை பீதிக்குள்ளாக்கின.


மகாராஜா, பக்கத்து காட்டு பிராணிகள் கிராமத்தில் நுழைந்து மக்களை தாக்குகின்றன. மக்கள் மிகவும் பயந்து போய் உள்ளனர்.
மகாராஜா, காமாக்ஷியின் குறட்டைகளால் பிராணிகள் பயந்து ஓடி விட்டன. அவைகள் கிராமத்தில் நுழைந்து இங்கே குடியேற முயல்கின்றன.
அப்படியா???
ஹும்ம்ம்... சொல்லப்போனால் நீங்கள் அனைவரும் காமாக்ஷிக்கு நன்றி சொல்ல வேண்டும்.
ஏன் மன்னா ?


பாருங்கள், நம் கிராமத்திற்குப் பக்கத்தில் காடு இருக்கிறது. இதுவரை, காட்டுப் பிராணிகள் நம் ராஜ்ஜியத்தில் நுழையாமல் இருந்ததற்கு காரணமே காமாக்ஷியின் குறட்டைகள் தான்.
ஆமாம்,
உண்மைதான்.
சிப்பாய்களே, சென்று காமாக்ஷியை திரும்பி அழைத்து வாருங்கள்.
கிராமத்து மக்கள் காமாக்ஷியின் குறட்டைகளுக்கு தங்களை பழக்கிக்கொண்டனர்.
முடிவு.


அப்ராகா டப்ரா



ஒரு காலத்தில் சர் லார்ட் என்ற பெயர் கொண்ட ஆசிரியர் ஒருவர் இருந்தார்.
அவர் மிகவும் புகழ் பெற்றவர். பல இடங்களிலிருந்து மாணவர்கள் அவரிடம் படிக்க வந்தனர். அவர்களில் ஜேக்சன் என்ற ஒரு மாணவன் மிக அழகாகவும் திறமையுள்ளவனாகவும் இருந்தான்.
சர் லார்ட் உடைய மனைவி மேடம் லைலியெட் அழகற்றவளாக இருந்தாள். ஒரு நாள் சிறிது வேலையாக சர் லார்ட் அடுத்த ஊருக்கு சென்றார்.
மேடம், ஜேக்சன் மீது ஒரு கண் வைத்திருந்தாள்.
ஜேக்சன் நான் உன்னை விரும்புகிறேன்.
ஆண்டவனே !! நீங்கள் என் ஆசிரியரின் மனைவி உங்களை நான் என் தாயாக மதிக்கிறேன்.



மேடம் எரிச்சல் அடைந்து ஜேக்சனுக்கு ஒரு பாடம் புகட்ட நினைத்தாள். ஆகவே, அவள் தன் ஆடைகளை கிழித்துக்கொண்டு சர் லார்ட் இடம் ஓடினாள்.
ஜேக்சன் என் ஆடைகளை கிழித்து விட்டான்.
சர் லார்ட் சீற்றம் அடைந்தார். ஜேக்சனை அடித்து வெளியே வீச தன் ஆட்களை அனுப்பி வைத்தார்.
அவன் மிகவும் பயந்துபோய் இருந்தான். தெருவில் யாரும் இல்லை. மெதுவாக எழுந்து அருகில் வெறிச்சோடி கிடந்த அரண்மனையில் தஞ்சம் புகுந்தான்.
ஜேக்சன் திடீர் என ஏதோ சத்தம் கேட்டு பார்த்தபோது லைலியெட் சில பூதங்களோடு அரண்மனைக்குள் நடந்து செல்வதை பார்த்தான்.
என்னை யாரும் காணாமல் இருக்கவும், இங்கே நடப்பதை அறியாமலி ருக்கவும் சர் லார்ட் சொல்லி தந்த மந்திரத்தை நான் ஓத வேண்டும்.


மேடம் லைலியெட் தன்னுடைய பூத படையுடன் வந்து ஏதோ மந்திரம் ஓதினாள், திடீர் என அந்த அரண்மனை பறக்க ஆரம்பித்து விட்டது.
பறக்கும் அரண்மனை யார்க் ஷயர் அடைந்ததும் மேடம் லைலியெட் அதை கீழே ஒரு காய் கறி பண்ணையில் இறக்கினாள். தன் பூத படையுடன் அவள் சுடுகாட்டிற்குள் சென்றாள்.
ஆ ! அவள் ஒரு சூனியக்காரி. எனக்கு, பசியாக இருக்கிறது. இந்த ஆப்பிள் பழத்தை விழுங்கிக் கொள்கிறேன்.
அவன் அருகிலிருந்த பண்ணையின் ஆப்பிள் பழத்தை சாப்பிட்டு அரண்மனையின் ஓர் மூலையில் மறைந்து கொண்டான்.
மேடம் லைலியெட் திரும்பி வந்து மந்திரம் ஓதினாள். அரண்மனை திரும்பி ஹாம்ஷயருக்கே வந்து விட்டது. அவள் வீட்டிற்குள் சென்றாள்.
"@ #% $ & *@ #*#@$


அடுத்த நாள் காலையில் ஜேக்சன் ஒரு விடுதியில் தங்க சென்றான். திடீர் என லைலியெட்ஜேக்சனை சந்தையில் பார்த்தாள்.
எங்கே போகிறாய் ஜேக்சன், நான் உனக்காக செத்து கொண்டிருக்கிறேன்
மேடம்!! என்னை விட்டு விடுங்கள். இது சரியில்லை, தயவு செய்து போய் விடுங்கள்.
மேடம் லைலியெட் சீற்றம் அடைந்தாள். ஜேக்சன் தவறாக நடந்து கொண்டதாகவும், அவன் விடுதியில் தங்கியிருப்பதாகவும் மீண்டும் சர் லார்ட் இடம் புகார் கொடுத்தாள்.
சர் லார்ட் விடுதிக்கு வந்து ஜேக்சனை திட்டினார்.
என் விடுதியிலிருந்து வெளியேறு !! உன்னை போன்ற வாடிக்கையாளர் எனக்கு தேவையில்லை.
நான் அந்த வெறிச்சோடி கிடந்த இடத்திற்கு மீண்டும் போக வேன்டும். அரண்மனையை பறக்க வைக்க லைலியெட் ஓதிய மந்திரம் எனக்கு தெரியும் , ஆனால் அதை கீழே இறக்கும் மந்திரத்தை நான் மறந்து விட்டேன்.


மந்திரத்தை கற்றுக்கொள்ள ஜேக்சன் மீண்டும் அரண்மனையில் மறைந்து கொண்டான். மேடம் வந்தாள் அவர்கள் யார்க் ஷயருக்கு பறந்து சென்றனர்.
ஜேக்சன் மந்திரத்தை கற்க தவறி விட்டான். இடையே யார்க் ஷயரிலிருந்து சில ஆப்பிள் பழங்களை கொண்டுவந்து அதை விற்க முயன்றான்.
யார்க் ஷயர் ஆப்பிள்கள் மிக புகழ் பெற்றவை.
ஹேய், ஆப்பிளைப்பாருங்கள், அவை யார்க் ஷயர் ஆப்பிள்கள். இவன் அங்கிருந்து திருடி இங்கே விற்றுக்கொண்டிருக்கின்றான்.
சிப்பாய்கள் ஜேக்சனை அரசனிடம் கொண்டு சென்றனர்.
இந்த ஆப்பிள்கள் உனக்கு எங்கிருந்து கிடைத்தன ? இவை யார்க் ஷயர் ஆப்பிள்களா?
என்னை மன்னியுங்கள் அரசரே , உங்களுக்கு எல்லா பதில் களும் கிடைக்க என்னை அந்த வெறிச்சோடி கிடக்கும் அரண்மனையில் விடுங்கள்.


பதில் பெற அரசர் ஆர்வத்துடன் இருந்தார். அதனால் ஜேக்சனையும் அவனுடைய நண்பர்களையும் அரண்மனைக்குள் அனுப்பினார்.
ஜேக்சன் மந்திரம் ஓதியதும் அரண்மனை பறக்கலாயிற்று.
சிறிது நேரத்தில், அது ஓர் ஆற்றின் மீது பறந்து கொண்டிருந்தது, ஜேக்சன் அரண்மனையை தாழ்வாகப் பறக்க செய்து ஆற்றில் குதித்தான்.
அந்நேரம், ஓர் அரசன் ஆற்றில் குளித்துக்கொண்டிருந்தான்.
யார் நீ ? நீ வானத்திலிருந்து வந்தாய்.
நான் இறைவனுடைய தூதன். நான் உலக சுகங்களை அனுபவிக்க இங்கே வந்திருக்கிறேன்.
தயவு செய்து என் அழைப்பை ஏற்றுக்கொண்டு என் அரண்மனையில் தங்கவும்.
ஜேக்சன் அழைப்பை ஏற்று அங்கே சிறிது காலம் தங்கியிருந்தான். ஆனால் இன்னும் அரண்மனையில் இருந்த நண்பர்களை நினைத்து கவலைக்கொண்டான்.


அடுத்த நாள் அவன் ஒரு பெரிய சாதுவை சந்தித்து முழு கதையையும் விளக்கினான், சாது, அரண்மனையை கீழே இறக்கும் மந்திரத்தை ஜேக்சனுக்கு கற்பித்தார்.
ஜேக்சன் அரண்மனையை கீழே இறக்கி நண்பர்களுடன் ஹாம் ஷயர் சென்றான்.
ஜேக்சன் அரசரிடம் போய் நடந்ததை விளக்கினான். அரசர் சிப்பாய்களை அனுப்பி மேடம் லைலியெட்டை பிடி த்து வரச்சொன்னார், ஆனால் அவள் ஹாம் ஷயரிலிருந்து தப்பித்து சென்றுவிட்டாள்.
அரசர் ஜேக்சன் உடைய வீரத்தை பாராட்டி, அவனுக்கு பரிசளித்தார், இளவரசியுடன் திருமணமும் செய்து வைத்தார்.
முற்றும்




**Buy Books & eBooks Online at www.indianvedicschool.com**

**INDIAN VEDIC SCHOOL PVT LTD.**

Plot No: 29B, Laxmi Nilayam, Road No: 8, Film Nagar,
Jubilee Hills, Hyderabad - 500096, Telangana, India.
info@indianvedicschool.com www.indianvedicschool.com
+91 7337200273